ஆஸாத்

AZAD

THE ONLY POLITICAL TAMIL FORTNIGHT
KUMBAKONAM

FOUNDER: HAJEE - M. ABDUR RAHMAN SAHIB

EDITOR: MAULANA ABDUL HAKEEM

27—3—50

பொருளடக்கம்.

வங்காளப் புயல்

சுதந்திர பட்டானிஸ்தான்

அன்றைய கூற்றும்
இன்றைய நிகழ்ச்சியும்

வீரன் முஹம்மதுகான்

செய்திகள்

ாத் தமிழ்பத்திரிகை

தனிப்பிரதி அணா

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்,

60 YEARS
NAME AND FAME

GURU

குழந்தைகளுக்கு கைகண்ட மருந்துகள்

1. கஸ்தூரி மாத்திரை
2. கோரோஜனை மாத்திரை
3. ஹெல்த் மாத்திரை
4. பால் உப்பு
5. வேப்பெண்ணை தைலம்
6. குரு தைலம்
7. குரு பாலர் டானிக்
8. கக்குவான் மருந்து

குரு தைலம்
மகா சஞ்சீவி.

குரு மருந்துசாலை, : திருச்சிராப்பள்ளி.

குரு பல்பொடி சகல தந்த ரோகங்கள் தீரும்.

நாங்கள் நவீன டிசைன்களில் ரிஸ்ட் வாட்சுகள், கிளாக்குகள், அலாரம் டைம்பீஸ்கள் ஏராள மாக ஸ்டாக் செய்திருக்கிறோம் உத்திரவாதத்துடனும், விலை மலிவாகவும் விற்பனை செய்கிறோம்.

ஜலால் & சன்ஸ்,

வாட்சு வியாபாரிகள் (கவர்மெண்ட் ரயில்வே சப்ளையர்கள்)

46, ராட்டன் பஜார், P. T. சென்னை

பிராஞ்சுகள்:— மவுண்ட் ரோடு சென்னை
அபித் ரோடு, ஹைதராபாத்.



பிரசித்தி பெற்ற

பிர்மா புகையிலையை

உபயோகியுங்கள்.

புரோப்ரைட்டர்:— A. N. இரத்தினம் & கோ.,
திருவாரூர்.

'AZAD' NATIONAL
TAMIL
BI - MONTHLY
KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய
மாதமிருமுறை பத்திரிகை
கும்பகோணம்.

மலர் 3	விரோதிஞு பங்குனிமீ 14உ (27-3-1950) ஹிஜிரி 1368 ஜமாத்உல்ஆஹிர்மீ 7உ திங்கட்கிழமை	இதழ் 1

வங்காளப் புயல்.

1950-ஜனவரி 3௦-அன்று இந்தியா பூராவிலும் ...ாத்மா காந்தி மறைவின் இரண்டாம் ஆண்டு துக் ... கொண்டாடப்பட்டது; தலைவர்கள் காந்திஜியின் ...ியை எடுத்துக்கூறி அதைப் பின்பற்றும்படி மக் ... கேட்டுக்கொண்டனர் ஆனல் பத்து நாட்கள் ...டைவதற்குள்—எந்தத்தீயை அணைக்க பாபுஜி ...காளி, பீகார் முதலிய இடங்களில் கல்லிலும் முள் ...ும் பன்னூறுமைல் கால்நடைப் பிரயாணம் செய் ...ரோ; எதற்காக சாகும்வரை உண்ணாவிரதம் மேற் ...ாண்டாரோ; முடிவில் எதற்காக ஆத்ம தியாகம் ...சய்து வீரமரணம் எய்தினரோ—அதே தீ மேற்கு ...ங்காளத்தில் குறிப்பாக கல்கத்தாவில் கோரத்தாண் ...டவம் புரிய வாரம்பித்துவிட்டது. சில நாட்களாக வங்காளத்தில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டு பலவித கலவரங்கள் நிகழ்ந்துவந்தன. சில சமயம் ஹிந்து மஹாசபையும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் கம்யூனிஸ்டுகளும் குழப்பங்களுக்குக் காரணமாயிருந் தனர். மொத்தத்தில் நெடுநாட்களாக வங்காளத்தில் அமைதியின்மை நிலவி வந்தது. இதற்குக் காரணமா ...ிருந்த பிரச்னைகளைத் தீர்ப்பதில் இந்திய சர்க்காரோ அல்லது மிஸ்டர் பி. ஸி ராயின் மந்திரிசபையோ ...வெற்றிபெறவில்லை. ஆனல் தற்கால குழப்பங்களின் ...பொறுப்பு. ராய் மந்திரிசபை, அகில இந்திய காங் ...ிரஸ் இந்திய சர்க்கார் அனைவருக்கும் சேர்ந்தது ...ன்று கூற நாம் தயங்கவில்லை. ஏனெனில் வங்காளி ...ின் அவநம்பிக்கையைப் போக்க எந்த தாப்பாரும் ...ந்த நடவடிக்கை இன்றுவரை எடுக்கவில்லை. குழப் ...ளை விட்டு நிர்மாணத்துறையில் கவனம் செலுத்த ...வித சந்தர்ப்பமும் அளிக்கவில்லை. வங்காள அர ...வில் தலையிட நாம் விரும்பவில்லை, கல்கத்தா, ...ாக்கா கலவரங்களால் ஏற்பட்ட நிலைமை வங்காளத் ...ிற்கு மட்டுமல்ல இந்தியாவுக்கே அபாயகரமானது. ...வ்வித நிலைமைக்குக் காரணமான துரோகிகளை நசுக் ...கும் காரியத்தில் காட்டப்படும் தயக்கம் தேச நல ...ுக்கு பெரும் ஆபத்தாய் முடியும். நாம் கூறும் அபிப்பிராயம் இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளுக் ...கும் நன்மை பயக்கக்கூடியது என்பது நிச்சயம்.

தீ மூட்டியவர்கள் யார் ?

மேற்கு வங்க கலவரங்களை ஆராய நாம் செய் திப் பத்திரிகைகளை மேற்கோள் காட்ட விரும்பவில்லை; பொறுப்பு வாய்ந்த தலைவர்களின் பேச்சுக்கள், பிரசங் கங்கள், அறிக்கைகள் முதலியவற்றை குறிப்பிடுவோம் முதலில் நகரத்தின் நிலைமையை சட்டசபை அங்கத் தினர்களுக்கு எடுத்துக் கூறியசமயம் பிரதமர் பி. ஸி. ராய் கூறியவற்றை குறப்பிடுவோம்

"கி. வங்காளத்தில் சில பிரதேசங்களில் நடை பெற்ற சம்பவங்களைப்பற்றிய பத்திரிகைச் செய்தியா லும், அகதிகளின் வருகையாலும், அச்சம்பவங்களுக்கு பதிலாக இங்கும் கலவரங்கள் நிச்சயம் ஏற்படக் கூடுமென்று நான் பயப்பட்டேன் ஆகவே, கலவரங் களைத் தூண்டக்கூடிய ஸ்தாபனங்களின் தலைவர்களைக் கூப்பிட்டு, பொதுஜன உணர்ச்சியைத் தூண்டிவிடும் வகையில் எந்தகாரியமும் செய்யவேண்டாம். அதனுல் யாவருக்கும் கெட்ட பெயர் உண்டாகும், என்று எச்சரித்தேன். நான் பத்திரிகாசிரியர்களையும் சந்தித் தேன் மக்கள் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய செய்திகளை பிரசுரிக்கவேண்டாம். ஏனெனில் குறிப் பிட்ட ஒரு வகுப்பாருக்கு எதிராக செய்யப்படும் காரியத்தால் எவ்வித லாபமுமில்லை. அதனுல் எவ் வித நன்மையும் இல்லை என்பது என் திடமான நம் பிக்கை என்று கூறினேன். நான் எச்சரித்த பிறகும் 9, 10 பிப்ரவரியில் கூட்டங்கள் கூடின, ஊர்வலங் கள் நடைபெற்றன மக்களின் உணர்ச்சிகள் தூண்டி விடப்பட்டன. அவர்கள் பலாத்காரத்தை மேற்கொள்ள வற்புறுத்தப்பட்டனர். சர்க்கார் இவ்வித நிலைமையை பொருத்துக்கொண்டிராது.

சிறுபான்மையினருக்கு நம்பிக்கை உறுதி அளிக் கையில் மிஸ்டர் ராய், "மே. வங்கத்தில் சிறுபான்மை யினர் உயிருக்கும் உடமைக்கும் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும். நான் எடுத்துக் கொண்டுள்ள நட வடிக்கைகளால் நிலைமை கட்டுக்கடங்கிவிடும் என்று நம்புகிறேன். இல்லாவிடில் இதையும் விட கடுமை யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று கூறினர். பிரதமர் கூறியவற்றை ஆராயும் முன் கல் கத்தா நிலைமையைப்பற்றி சரத் சந்திரபோஸ் கூறி யுள்ளதையும் அறிந்துகொள்வது நலம்.

"சில நாட்களாக கிழக்கு வங்காளத்தின் சில பாகங்களில் சிறுபான்மையினர் அக்கிரமத்திற்குள்ளாகியிருப்பதாய் செய்திகள் கிடைத்துள்ளன. நான் வியாதியுற்றிருக்கிறேன். படுக்கையிலிருந்தே பிரதமர் மிஸ்டர் நூருல் அமீனுக்கு கடிதம் எழுதி, கொடுமைகளை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கூறினேன் ஆனல் இரு சர்க்கார்களின் அதிகாரிகளும் அறிவுடனும் முன்னெச்சரிக்கையுடன் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் இத் துக்ககரமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கமாட்டா என்பதை நினைக்க எனக்கு வருத்தமாயிருக்கிறது. வகுப்புவாத உணர்ச்சிக்கு ஆளாயி இங்கு யிருப்பவர்களிடம்-பழிக்குப்பழி தீர்ப்பதில்எவ்விதநலனும்இல்லையென்று கூறுகிறேன்" வகுப்புவாதிகளின் பசப்பு வார்த்தைக்கு ஆளாக வேண்டாம். அவர்கள் சிறுபான்மையினர் நலன் என்ற போர்வையில் உங்களை ஏமாற்றுகிருர்கள். அவர்கள் தேசத்திற்கும், சமூகத்திற்கும் துரோகம் இழைப்பவர்கள். அவர்கள் கூறுவதைக் கேட்கவேண்டாம்—என்று இருபுறத்து பொது மக்களிடமும் கூற ஆசைப்படுகிறேன்." என்ருர் பாபு சரத் சந்திரர்.

தொடர்ந்து கூறுகையில் ' கல்கத்தாவில் நடைபெற்ற கலவரங்களின் பொறுப்பு பத்திரிகையாளருக்கும் சேர்ந்துள்ளதென்பதை நான் ஒருநிமிஷத்திற்கும் மறக்கமாட்டேன். உணர்ச்சிகளைத் தூண்டும் அவர்களின் பொறுப்பற்ற கட்டுரைகள் மக்களைப் பெரும் அளவில் தூண்டியுள்ளன. உண்மை சம்பவங்களைப் பற்றி வங்காள பிரதமருக்கும் சரிவரத் தெரியாத சமயத்தில், இவ்வித செய்திகளைப் பிரசுரிப்பதால் மக்கள் பயங்கர அளவுக்கு தூண்டப்படுகிருர்கள். இவை கலவரத்தீயை வளர்க்க எண்ணெய்போல் உதவின. வங்காளப் பிரிவினையை கடுமையாக ஆதரித்தவர்கள் இப் பத்திரிகையாளரே. பிரிவினை போராட்டத்தை முழுமூச்சுடன் ஆதரித்தவர்களும் இவர்களே. ஆயினும் இன்று பிரிவினை ஏற்பட்டுவிட்டது. மாறுபட்டுள்ள தற்கால நிலைமைக்கேற்றவாறு தங்கள் கடமை என்னவென்பதை அவர்கள் உணர்ந்திருப்பர் என்று நம்பினேன். தங்களால், கட்டுரைகளால் இரு வங்காள சிறுபான்மையினரின் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து உண்டாக்கமாட்டார்கள் என்று எதிர்பார்த்தேன். கிழக்கு வங்காள சிறுபான்மையினரிடம் அவர்களுக்கு அனுதாபமிருந்தால் ஆசிரியர் ஆசனத்தையுதறித்தள்ளி, ஆபத்து ஏற்பட்ட இடங்களில் போராடி யிருக்கவேண்டும். கலவர அபாயம் இல்லாத இடத்தில் உட்கார்ந்து வீரம் பேசுவது சுலபமே குண்டர்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட மிருகங்களைப் போல் நடமாடி வருகின்றனர்; என்று எனக்கு செய்திகள் கிடைத்துள்ளன. அவர்களை அடக்குவது மேற்கு வங்காள ராணுவத்திற்கும் போலீசுக்கும் கடமையாகும். கொள்ளை, கொலை, நாசம் விளைவிப்பது தவிர அவர்களுக்கு வேறு நோக்கமில்லை. இ சாபக்கேட்டை உடனே களைந்தெரிவது சர்க்காரி கடமையாகும்." என்ருர் சரத் பாபு.

மேற் கூறியவை மே. வங்காள பொறுப்புவாய்ந் தலைவர்களின் அறிக்கைகளாகும். அவைகளை வி நம்பிக்கையான அறிக்கைகளை வேறு யாராலும் வெ யிட முடியாது. ஆகவே அவற்றை ஆதாரமாய் கொண்டு நாம் தீர்மானிக்கும் கலவரங்களின் விளை களில் நிச்சயமாய் உண்மையை அடிப்படையாய் கொண்டவையாகவே இருக்கமுடியும்.

மேற்கண்டவற்றில் கோடிடப்பட்ட பகுதிக கவனமாய் படித்தால் உண்மை நிலைமையை அறிவ சுலபமாகிவிடும்.

' மேற்கு வங்காள கலவரங்கள், கி. வங்கா அட்டூழியங்களுக்கு எதிர் நடவடிக்கையாக தூண் பட்டவையே. கி. வ. கலவரங்கள் செய்திகள் பிரசுரத்தாலும், அகதிகளின் வருகையாலும் கலவ நிகழக்கூடும் என்ற பயங்கர நிலைமை ஏற்ப விட்டது' என்று இருதலைவர்களும் கூறியுள்ள பயங்கர நிலைமை உண்டாகிவிட்டதென்பது பிரத பி. ஸி. ராய்க்கும் தெரியும். "கி. வங்காளம் பொருத மட்டில் உண்மை சம்பவங்கள் பிரதமருக்கும் தெ யாது," என்கிருர் சரத் பாபு

இச் சந்தர்ப்பத்தில் நாம் அதை வற்புறுத்த வில்லை ஏனெனில் நாம் எந்த தலைவர்பேரிலும் குற்றம் கூற விரும்பவில்லை. உண்மையில் கலவரங்களுக்கு காரணம் என்ன என்பதை ஆராயவே விரும்புகிறோம்.

(1) கலவரங்களைத் தூண்டக்கூடிய வகையில் நடவடிக்கையில் இறங்கக்கூடியவர்கள் என்ற சந்தே கப்பட்ட ஸ்தாபனங்களின் தலைவர்களைக் கூப்பிட் குழப்பங்கள் விளையும் வகையில் காரியங்களை செய்ய தீர்கள் என்றும், மக்கள் உணர்ச்சிகளை தூண்டிவிடு வகையில் எந்த காரியத்தை மேற்கொள்ள வேண்ட மென்று எச்சரித்தேன். என்கிருர் பிரதமர்." ஆ னும் " ஜனவரி 9, 10 தேதிகளில் பொதுக் கூட்ட களும், ஊர்வலங்களும் நடந்தன. மக்களின் உணர் சிகளைத்தூண்டி கோபம் மூட்டப்பட்டு பலா காரத்தை மேற்கொள்ள வற்புறுத்தப்பட்டன." பதையும் பிரதமர் ஒப்புக்கொள்கிருர்.

(2) " இரு வங்காள அதிகாரிகளும், முன்னெ சரிக்கையுடனும் தெளிந்த அறிவுடனும் சந்தர்ப்பத்தி கேற்ப நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தால் க வரங்கள் நிகழ்ந்திருக்க மாட்டா" என்ருர் சரத்ப பு தொடர்ந்துகூறுகையில், "குண்டர்கள் கட்டவிழ்த் விடப்பட்ட.. மிருகங்களைப்போல் நடமாடி வருகின் னா என்று எனக்கு செய்திகள் கிடைக்கின்ற அவர்களை அடக்குவது வங்க ராணுவத்திற்கு

பாலீசுக்கும் கடமை. கொலை, கொள்ளை நாசம் விளைவித்தலே அவர்களுடைய நோக்கம். உடனே இச் சாபக்கேட்டை அகற்றுவது சர்க்காரின் கடமை யாகும்.'' என்று கூறுகிறார்.

(3) "இக்கலவரங்களுக்கு மற்றொரு காரணம், நெடுங்காலமாக இந்திய எல்லைக்கு இப்பால், சிறு பான்மையினர் நலன் என்ற போர்வையில் பொதுஜன உணர்ச்சிகளை தூண்டிவிட்ட பத்திரிகைகளே. "கல வர அபாயம் இல்லாத இடத்தில் வீரம் பேசுவது சுலபம்.'' என்று சுட்டிக்காட்டுகிறார் சரத் பாபு.

நாம்நீண்ட ஆராய்ச்சியில் வாசகர்களை கொண்டு செல்ல விரும்பவில்லை.—இன்று நிகழ்ந்துள்ள கலவரங் கள் ஒரு கட்சியாரின் கட்டுப்பாடான சதியின் விளைவே என்பது தெளிவாய்த் தெரிகிறது. 1949-டிசம்பரில் ஹிந்துமஹாசபை மஹாநாடு கல்கத்தாவில் நடக்க விருப்பதாய் அறிவித்தபோதே புயல் எத்திசை யில் வீசப்போகிறதென்பதை அறிந்து கொண்டோம். மஹாசபை வங்காள அமைதியின்மையை பயன்படுத் திக்கொள்ளப்போகிறது என்பதை அறிந்தோம் இக் காரணத்தாலே 'அகண்ட ஹிந்துஸ்தானம்; என்ற க்குரல் கிளம்பியது. பழிக்குப்பழி தீர்க்கும் தத்து வம் புதியதல்ல. வட இந்திய கலவரங்களில் ஹிந்து மஹாசபை எவ்வளவுதூரம் பங்கெடுத்துக் கொண் டது என்பதை யாவரும் அறிவர் 1947-ல்டில்லியை தலைமை ஸ்தலமாகக்கொண்டு ஹிந்துமஹா சபையார் பத்திரிகைமூலம் விஷத்தைக் கக்கிவந்தனர் என்பதை யும், 47-ம ஆண்டு தசரா கொண்டாட்டத்தின் போது வெளியிடப்பட்ட ஒருபடத்தில் காந்திஜியைக் கொலை செய்ய தூண்டப்பட்டதையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள் "இத்தசராவின்போது இந்த ராவணனை தீர்த்துக்கட்டுங்கள்'' என்ற பெயரில் அப்படம் வினி யோகிக்கப்பட்டது. ராம் ராஜ்யம் ஸ்தாபிக்கப் பாடு பட்ட மஹானுக்கு ராவணபட்டம் அளிக்கப்பட்டது கடைசியில் ஒரு மார்ட்டிய ஹி. ம சபை வாலிபன் இந்தியதீபத்தை அணைத்தும் விட்டான். அத்தீப வொளியே இன்று சிலவியுள்ள இருட்டிலும்பிரகாசித்து வழிகாட்டி வருகிறது. இன்று இந்தியா அத்தீபத்தை பார்க்கிருக்கலாம்; நாளை வேறு ஒரு தேசத்தார் அதன் ஒளியால் பயன்பெறலாம். எதுவாயினும் அவ்வொளியை அகற்றிவிட முடியாது. அதுசத்தியம், மனிதத்தன்மை, சமத்துவம், முன்னேற்றம் முதலிய வற்றின்தீபமாகும் அதை அணைத்துவிட யாராலும் முடியாது. மஹாத்மா காந்தியின் ரத்தம் தோய்ந்த த்தீபம் விஷப் பாம்பின் சீற்றத்தால் அணைந்து போகாது: அத் தீபத்தின் ஒளி கிரணங்கள் புத்த ரனின் சத்திய போதனையை அள்ளிக் கொட்டக் கூடியவை ஏசுநாதர் கற்றுக்கொடுத்ததும், சாக்ரடீஸ் உயிரை பலியிட்டு அடைய நினைத்துள்ள லட்சியப் பாதையை மக்களுக்கு புலனுக்கும் அத்தீபம் ஒருக்கா லும் அணைந்துபோக முடியாது

ஹி. ம சபையாரால் தூண்டப்பட்ட தீ ஒரு நாள் சுடர் விட்டெரிந்தது. ஆனால் அணைந்துபோகு முன் இந்திய சரித்திரத்தில் அதனால் ஏற்பட்ட கருப்புக கறையைப் போக்க பன்னூறாண்டுகள் பிடிக்கும் பொதுமக்கள் தங்கள் உண்மையான சத்துரு யாரென்பதை அறிந்துகொண்டதும் ஹி. ம. சபை அஞ்ஞாதவாசத்தை மேற்கொண்டுவிட்டது. ஆனால் இன்று சாதகமான நிலைமை ஏற்பட்டிருப் பதைக்கண்டதும் வங்காளத்தைச் சுட்டெறிக்க முன் வந்துள்ளது. முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டிவிடும் தங்கள் பழைய முறையை இவ்விடத் திலும் கையாள முற்பட்டுள்ளனர் இத்துரோகங்கள் அனைத்திற்கும் நோக்கம் தற்கால சர்க்காரை எவ் விதத்தில் தோற்கடித்து பதவிகளைக்கைப்பற்றிக்கொள் வதென்பதே. தற்கால சர்க்காரிடம் அவர்கள் கொண் டுள்ள அளவு அவர்களுக்கு பாகிஸ்தானிடம் வெறுப் பில்லை. ஏனெனில் நேரு சர்க்கார் இருக்கும்வரை அதிகாரத்தைக் கைப்பற்றமுடியாது என்பதை அவர் கள் நன்கறிவார்கள். 1947-லும் அகதிகளை தனக்கு சாதகமாய் உபயோகிக்கவே ஹி'ம சபை முயற் சித்தது. ஏனெனில் அகதிகள் உள்ள நிலையில் அவர் கள் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவது சுலபம் வீடு, வாசல் இழந்து, சொத்துக்களைப் பறிகொடுத்து, பல வித இன்னல்களுக்கு ஆளாகி, புது சூழ்நிலையில் கஷ்டப்படும் அகதிகளிடையே பீதியை உண்டு பண்ணி, செய்யற்கறியாத கொடும் நடவடிக்கைகளை யும் அவர்களால் நடத்திவிடுகின்றனர். ஆகவே சமூக துரோகிகள் அகதிகளை தங்கள் துரோக காரி யங்களில் உபயோகிப்பதில் பெரும்பாலும் வெற்றி யடைந்துவிடுகின்றனர். மே. பாகிஸ்தான் அகதிகள் பொறுத்தமட்டில் புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொண்டு வருகின்றனர். அவர் களுடைய கடந்த கால கொந்தளிப்பும் அடங்கி விட்டது. ஆனால் கி. பாகிஸ்தான் அகதிகள் சம்பந்த மாக இந்திய சர்க்காரும், மே. வங்க சர்க்காரும் எவ் வித கொள்கையையும் நிர்ணயிக்கவில்லை ஆகவே அவர்கள் அடைந்துவரும் துன்பங்களால் வெறுப்பு மனப்பான்மை கொள்வது இயற்கையானது ஆகவே அவர்களைப்பற்றி நேர்மையான கொள்கை கடைப் பிடிக்கப்படும்வரை தேசத்தில் கவலையளிக்கும் நிலைமை நீடித்தே வரும்.

பாகிஸ்தானும் குற்றவாளியே!

தற்கால வகுப்புவாத கலவரங்களின் பொறுப்பி னின்றும் பாகிஸ்தானை விலக்கிவிட முடியாது கி வங் காளத்திலிருந்தும் வெளியேறும் ஹிந்துக்களைத் தடுக்க நேர்மையான நடவடிக்கை எடுக்காமல், அதனால்

மே. வங்க முஸ்லிம்கள் மட்டுமல்ல, நாலரை கோடி இந்திய முஸ்லிம்களுக்கு பெரும் அபாயகரமான நிலைமையை உண்டுபண்ணி விட்டது இ பாகிஸ்தான் சர்க்கார். தேசம் துண்டாடப்பட்டபின் இந்தியாவில் வகுப்பு வாதத்தை எதிர்க்கும் சக்திகள் பெரும் தொண்டாற்றியுள்ளன. அவற்றின் பலனை இன்று வரை காணலாம். ஆனால் மற்றொரு முறை இந்திய முஸ்லிம்களின் சமாதானத்தைக் குலைக்கவும், அவர்களின் வாழ்க்கைக்கு வெடி வைக்கவும், பாகிஸ்தான் செய்யும் காரியங்கள் இஸ்லாமிய தர்மத்திற்கே முற்றிலும் முரண்பட்டவை என்பது மட்டுமல்ல, வருங்காலத்தில் எவ்வித பலன் உண்டாகப் போகிறதென்பதை அறியும் சக்தியும் பாகிஸ்தானிகளுக்கு இல்லையென்பதைத் தெளிவாய்க் காட்டுகின்றன

கவலையளிக்கும் இத்தனை சம்பவங்களிடையே, இரு வங்க காரியதரிசிகளும் கூடிப் பேசிய பின் பாகிஸ்தான் சர்க்கார் ஹிந்துக்களின் வெளியேற்றத்திற்கு தடை விதிக்க நினைக்கிறது என்ற செய்தி சற்று சமாதானமளிக்கக் கூடியதே இந்நடவடிக்கைக் கொஞ்ச நாட்களுக்கு முன் எடுக்கபபட்டிருந்தால் இத்தகைய பயங்கர சம்பவங்களுக்கு ஹேதுவே இல்லாமலிருக்கும். இன்னும் சந்தர்ப்பமிருக்கிறது. கி. மே. வங்க சர்க்கார்கள் அரசியல் வேறுபாடுகளை நீக்கி இரு பக்கத்து சிறுபான்மையினருக்கும் சமாதான வாழ்வு வாழ வகை செய்துவிட்டால் வருங்காலத்தில் எவ்வித ஆபத்தும் ஏற்படாதென்பது நிச்சயம்.

மேற்கு வங்க சர்க்காரின் கடமை என்ன?

கல்கத்தா கலவரங்களின்போது மே. வங்க சர்க்காரின் க..மைகளையும் நாம் ஆராயாமல் இருப்பதற்கில்லை மேற்கூறிய பி. ஸி. ராயின் அறிக்கையில் அவர்.—

"குண்டு வீசுபவர்கள், தூண்டிவிடும் சுவரொட்டிகளால், மக்களை வெறுப்புணர்ச்சிக்காளாக்கும் சுலோக கோஷங்களை தடை செய்யும் காரியத்தில் பொது ஜனங்கள் பலரும் உதவி செய்யும் வரையில் போலீஸாரால் ஒன்றும் செய்யமுடியாது" என்கிறார்.

மற்றோரிடத்தில் "கி. வங்க கலவர செய்திகள் காட்டுத்தீ போல் பரவ ஆரம்பித்தது. அகதிகள் கூட்டங்கூட்டமாய் ஓடிவந்தபோது வகுப்பு வாத கட்சித்தலைவர்களையும், குறிப்பாக பத்திரிகை நிருபர்களையும் அழைத்து குழப்பத்தை விளைவிக்கும் செய்திகளை வெளியிட வேண்டாமென்றும் சமாதானம் நிலவ பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன். அம்மட்டுமல்ல; கோபமூட்டும் காரியங்களாலும், குறிப்பிட்ட ஒரு வகுப்பாரை துன்புறுத்துவதாலும் ஒரு பலனும் ஏற்படாது., நிலைமை இன்னும் மோசமானதாகிவிடும் என்று கூறினேன். ஆனால் துரதிர்ஷ்டமாக என் கோரிக்கை வீணாகிவிட்டது." என்று கூறியுள்ளார்.

வகுப்புவாதம் பெயருக்கும் காணமுடியாத உத்தம தலைவர்களில் டாக்டர் பி ஸி. ராயும் ஒருவர் என்பதை நாம் நம்புகிறோம். ஆகவேதான் கல்கத்தா கலவரங்களுக்கு எவ்வித குற்றமும் அவர்மேல் கூற முடியவில்லை ஆயினும் சரத்பாபு கூறியவற்றிலிருந்தும் பிரதமரே கூறியவற்றிலிருந்தும் என் வேண்டுகோள் எவ்வித பலனும் அளிக்கவில்லை குழப்பவாதிகள் குழப்பங்களை கிளப்பி விட்டுக்கொண்டிருந்தனர். பத்திரிகைகள் பலாத்காரத்தைத் தூண்டிவந்தனவென்றும் தெரிந்த பின்னரும் பத்திரிகை செய்திகளுக்கு எவ்வித தணிக்கையும் போடவில்லை. கூட்டங்களில் வகுப்புவாதத்தைத் தூண்டுபவர்களுக்கு தடை விதிக்கவில்லை. குழப்பவாதிகளைக் கண்காணிக்கவில்லை கலவரங்களை அடக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட பிற்கால நடவடிக்கைகளால் நல்ல பலன் ஏற்பட்டுள்ளதென்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். வருங்கால சம்பவங்களை சீர்திருத்த முதலிலிருந்தே தயாராயிருக்க வேண்டியது சர்க்கார்களின் கடமையாகும் நெருப்பு பிடிக்குமுன்பே நெருப்பு பிடிக்கக் கூடிய சாதனங்களை அகற்றுவதே முறையாகும். நெருப்பு பிடித்துவிட்டால் அணைவதற்குள் நஷ்டத்தை உண்டாக்கியே தீரும்.

சரத்பாபு பல முக்கிய விஷயங்களைக்கூறியுள்ளார். அவற்றைத் தட்டிக்கழிக்க முடியாது.

(1) மே. வங்க பிரதமருக்கு கிழக்கு வங்கத்தில் உள்ள நிலைமை முற்றிலும் தெரியாது

(2) அதிகாரிகள் சற்று கவனமாய் நடவடிக்கை எடுத்திருந்தால கலவரங்கள் நிகழ்ந்திரா

(3) குண்டர்கள் கட்டவிழ்த்த மிருகங்கள் போல் திரிகின்றனர் என்று எனக்கு செய்திகள் கிடைத்துள்ளன

(4) சிறுபான்மையினர் நலன் என்ற போர்வையில் குழப்பத்தை உண்டுபண்ணத்தக்க செய்திகளை சில பத்திரிகைகள் பிரசுரித்து வந்தன.

மேற்கூறியவற்றைக் கவனிக்கையில் மே. வங்க சர்க்காரின்போக்கால் எவ்விதவிளைவையும் தீர்மானிக்க முடியவில்லை. வகுப்புவாத பத்திரிகைகள் விஷமூட்டும் செய்திகளைப் பிரசுரித்து, மக்கள் உணர்ச்சிகளைத்தூண்டி, தேசத்தின் சமாதானத்தையே குலைக்க முற்பட்டிருக்கையில் மேலும் பிரதமருக்கு உண்மை சம்பவங்கள் தெரியாதபோதும் சர்க்கார் அச்செய்திகளைத்தடுக்கவும், குழப்பவாதிகளின் கொட்டத்தை அடக்கவும், பலனளிக்கக்கூடிய முறையில் என் நடவடிக்கை எடுக்கவில்லை! என்ற கேள்வி எழுகின்றது. இதற்குத்தக்கவாறு பதில் பிரதமரும் அளிக்கவில்லை. மேற்கு வங்க சர்க்கார் அறிக்கையிலும் காணமுடிய

வில்லை நிலைமையை சமாளிக்க அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவில்லை இதனால் அதிகாரிகள் பி. சி. ராய் சர்க்காரின் உத்தரவுகளை மதிக்கவில்லை என்றே ஏற்படுகிறது அப்படியாயின் நிர்வாகத்துறையில் உள்ள இப்பெருங்குறையைத்தீர்க்க இன்னும் ஏன் முயலவில்லை? அல்லது சர்க்கார் கொள்கை வெறும் ஏட்டளவில் உள்ளன, செயலளவில் எல்லாம் தலை கீழாகவே உள்ளன என்று நினைப்பதா? இதுதான் உண்மை நிலையென்றால் காங்கிரஸின் சீர்கேட்டிற்கு இதைத் தவிர உதாரணம் கூறவேண்டிய அவசியம் இல்லை.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பெரும் அளவில் பலனளிக்கக் கூடியவை என்று நம்மால் கூறமுடியாது. அடிப்படைக் காரணங்களை அகற்றிவிட கடுமையான நடவடிக்கை தேவை. ஏனெனில் குழப்பவாதிகளுக்கு செல்வாக்குள்ள அரசியல் கட்சிகள், பத்திரிகை அச்சடிக்கும் யந்திரங்கள் முதலியவற்றின் ஒத்துழைப்பு உண்டு. அக்கட்சிகள் குழப்பங்களைத்தூண்டி தங்கள் நோக்கத்தை அடைய விரும்புகின்றன. ஆகவே வெறும் குண்டர்களை அடக்கிவிட்டால் குழப்புவாதிகளை அடக்கிவிட்டதாகாது அதன் ஆணிவேர்கள் இந்திய அரசியல் கட்சிகளின் அரசியலில் பாய்ந்துள்ளன. அவற்றைக் களைந்தெறிந்தாலன்றி குறிப்பாக மே. வங்கத்தையும பொதுவாக இந்தியாவையும் கலவரங்களினின்றும் காப்பாற்ற முடியாது. பத்திரிகைகளும் விஷமூட்டி மக்களின் இதயங்களைத் தூண்டி கலவரங்களை விளைவிக்க விரும்புகின்றன. மக்களை வெறும் பகடைக் காய்களாக மதிக்கின்றனர் தலைவர்கள் எவ்விதத்திலும் நாசிச முறையில் அராஜகத்தை உண்டுபண்ணி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதே அவர்களின் நோக்கம். சாகுந்தறுவாயிலுள்ள வகுப்புவாதப் பேயின் கடைசி தாண்டவம் இதுவே. ஜனநாயகத்துடன் அதன் கடைசிப் போராட்டம் ஆகும் அது தன் பலம் அனைத்தையும் திரட்டி யுத்த களத்திற்கு வந்துள்ளது. தேசம், சமூகம் முதலிய யாவற்றுடன் அன்புள்ள ஒவ்வொரு இந்தியனும். தேசத்துரோகி சமூகத் துரோகிகளான வகுப்பு வாதிகளை எதிர்த்து போரிட தன் சாதனங்கள் யாவற்றுடனும் முன்வர வேண்டும். இந்தியாவுக்கு கம்யூனிஸத்தை விட, வகுப்பு வாத பாசிசத்தினாலேயே பெரும் அபாயம் நேர முடியும் என்ற உண்மை நிதர்சனமாகி விட்டது பிற்போக்கு வாதிகளுக்கும் முற்போக்கு வாதிகளுக்கும் நிகழும் போராட்டத்தின் கடைசி கட்டம் இதுவே. ஆகவே ஒவ்வொரு தேசபக்தனும் வகுப்புவாத விஷப் பாம்பை நசுக்கி ஆழப் புதைக்க முன் வருவது இன்று முக்கிய கடமை,

இனி என்ன செய்யவேண்டும் ?

இவ்விதம் ஏன் நடைபெற்றது என்பதை விட்டு இனி என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்வதே முக்கியம். இனி இவ்விதம் நிகழாதிருக்க நாம் எவ்வழியைப் பின் பற்ற வேண்டும் இப்பிரச்னையில் மௌலானா ஆஸாதைத் தவிர வேறு ஒருவரும் சரியான வழிகாட்டவில்லை கல்கத்தாவில் காங்கிரஸ் ஊழியரிடையே பேசுகையில் மௌலானா ஆஸாத் கூறியதாவது :—

“பாகிஸ்தானிலிருந்து வகுப்புவாத குழப்பங்களின் செய்திகள் வந்தாலும் நாம் பழிக்குப் பழி தீர்க்க நினைக்கக்கூடாது என்றும் தளரா உறுதிகொள்வது நம் முதல் கடமை இம்மட்டுமல்ல அத்தகைய பிரஸ்தாபமும் செய்யக் கூடாது. பழிக்குப் பழி யாரிடம் தீர்ப்பது? அச்சம்பவங்களில் எவ்வித சம்பந்தமும் கொள்ளாதவரிடமா? இங்கு நடைபெற்ற அக்கிரமங்களுக்கு ” பாக்கிஸ்தானில் நிகழ்ந்தவற்றின் விளைவே இங்கு நடந்த படு கொலைகள்!; என்று நொண்டிச்சாக்கு கூறவும் நம்மில் பலர் இருக்கிறார்கள் குழப்பங்களை எவ்விதத்திலும் தூண்டிவிட நினைப்பவர்களே இவ்வித சாக்குகள் கூறி தங்கள் ஈனச் செயல்களை திரையிட நினைப்பவர்கள் பாக்கிஸ்தானில் நடைபெற்ற சம்பவத்தின் செய்திகள் கிடைத்தால் அதைக் கண்டிக்க வேண்டியதுடன் இந்நாட்டில் அதற்கு பதிலாக எவ்வித கலவரத்தை நாம் விரும்பவில்லை என்று செயலளவில் காட்ட வேண்டும். இவ்விதம் நம் நாட்டில் பெரு பான்மையருக்குள்ள சாதாரண வாழ்வே சிறு பான்மையினருக்கும் உண்டு என்பதை எடுத்துக் காட்ட வேண்டும். நாம் என்றென்றும் இவ்விஷயத்தை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

“மேற் கூறிய போக்கை நாம் எச்சந்தர்ப்பத்திலும் கடைபிடித்தால், பாக்கிஸ்தான் சர்க்காரை திறந்த மனதுடனும் திட சித்தியுடனும் செய்யலாம் நான் நிச்சயமாய் நம்புகிறேன். அம் முறையிலேயே பாக்கிஸ்தானிடம் நாம் எதிர்பார்க்கும் போக்கிலும் நாம் நேர்மையானவராய் இருக்க முடியும், சிறு பான்மையினரை நல்ல முறையில் நடத்த பாக்கிஸ்தானைக் கேட்கவும், பயமுறுத்தவும் அல்லது யுத்தமே மேற்கொள்வோம், நம் நாட்டின் நாம் நியாயத்துடன் சிறு பான்மையினரை நடத்தியே செய்ய வேண்டிய காரியங்களாகும். என்றார் மௌலானா ஆஸாத்.

இன்று நிலைமை கட்டுக்கடங்கி விட்டதைக் குறித்து சந்தோஷப் படுகிறோம் டாக்காவில் நடைபெற்ற காரியதரிசிகளின் மஹாநாடும் பலனளிக்கிறது இருபுறமும் நல்ல நிலைமைக்கான அறிகுறிகள் தோன்றி விட்டன. ஆயினும் அபாயம் நீங்கி விடவில்லை. முதலில் சிறுபான்மையினருக்கு ஏற்பட்டுள்ள பீதிகளைப் போக்கு அவர்களுக்கு உண்மை நிலைமை புலனாகும்

— சுதந்திர பட்டானிஸ்தான். —

—(கோபால் B A.)—

" சென்ற காலத்தைப் போல், முகலாயர்களின் செல்வாக்கும், சிறப்பும் இன்று இல்லை; வீரமும், உறுதியுமில்லை, ரணகள ஆர்வமுமில்லை; அவர்களுடைய புகழ் மங்கி வருகிறது. இன்று நான் ஒருவன் இருக்கிறேன் என் லட்சியங்கள் சூரிய சந்திரரையும் விட உயர்ந்தவை. பகவானின் கிருபா கடாட்சம் எனக்கு நிறம்ப கிடைத்துள்ளது. என்னைப்போல் இன்னும் சிலர் எனக்கு உதவி புரிவாரானால் என் ஆனந்தத் திற்களவேயிராது. ஆனால் யாருமில்லை, இக்கவலை ஒன்றே என் இதயத்தை புண்படச்செய்கிறது "

ஔரங்கஜேப் ஆட்சியில் பட்டாணிய சமூகத்தினரை விழிப்புறச்செய்த மாபெரும் புலவர் குஷ்ஹால்கான்கதக் என்பவர் கவிதையின் மொழிபெயர்ப்பே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. அவர் புலவர் மட்டுமல்ல, ரணகள வீரனுமாவார். முகல் சாம்ராஜ்யத்தை எதிர்த்துப்போராடிய கதக் ஜாதியாரின் தலைமைதாங்கி போராடிய வீரர். அப்போராட்டத்தால் முகலாய சாம்ராஜ்யம் ஆட்டம் கண்டது. அன்று முகலாயர்களை சவால் விடுத்து எழுதிய கவிதையே மேற் குறிப்பிடப்பட்டுள்ளது.

" பட்டாணியரின் கீர்த்தியை நிலைக்கச்செய்ய நான் வாளேந்தி போராடுகிறேன். உலகத்திலேயே தன் மானமும் வீரமுடைய தீரன் குஷ்ஹால்கான் கதக் என்பவன் நானே " என்று மற்றொரு கவிதையில் கூறுகிறார் புலவர் குஷ்ஹால்கான்.

முகலாயரை எதிர்த்து நடைபெற்ற கடைசி போராட்டம் கதக் ஜாதியார் நடத்தியதே. அதன் பின் முகலாயரின் செல்வாக்கும் சக்தியும் இந்தியாவில் குறைந்துபோய்விட்டது அதற்குமுன் பட்டாணியரின் போராட்டத்தால் முகலாய சாம்ராஜ்யம் அநேகமுறை பெருந்துன்பங்களை அனுபவித்துள்ளது பட்டாணியரின் போராட்டத்தை முறியடிக்க அக்பர் தன் கடைசிகாலத்தில் மாபெரும் படை ஒன்றை அனுப்பினன். சண்டையில் இரண்டாயிரம் முகலாய வீரர்கள் உயிர் துறந்தனர் குறிப்பாக அக்பரின் வலதுகரயாகபாவிக்கப்பட்ட ராஜாபீர்பலும் அச்சண்டையிலேயே உயிர்துறந்தார்.

ஔரங்கஜேபுக்கு அனேகமுறை அவர்களுடன் போராடவேண்டியதாயிற்று. 1667-ல் யூசுப் ஜயீ ஜாதியார் முகலாயரை முறியடிக்க ஓர் பெரும் படை திரட்டி முன்னேறி, சிந்து நதியைத்தாண்டி ஹஜாரா ஜில்லாவைத் தாக்கினர். மூன்றுமுறை சைனியங்களை அனுப்பி அவர்களை முறியடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஔரங்க ஜேபுக்கு ஏற்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப்பின் 1671-ல் மஹாராஜஸ்வந்த்சிங் என்பவர் ஜம்ருத் கவர்னராக நியமிக்கப்பட்டார் ஔரங்க ஜேபை எதிர்த்து இரண்டாம்முறை அப்ரீதி ஜாதியார் போராடினர். அதற்கு தலைமைதாங்கிய வீரர் அஜ்மல் கான் என்பவர் போராட்டத்தில் அப்ரிதி வீரர்கள் கைபர் கணவாயை அடைத்துவிட்டனர் ஆகவே அவர்களை அடக்க ஔரங்கஜேப் ஓர் பெரும்படையை அனுப்பிவைத்தார்

ஔரங்கஜேபை எதிர்த்து நடந்த போராட்டங்களில், மிகவும் பயங்கரமானது கதக் ஜாதியாரின் போராட்டமே. அதன் தலைவர்களில் புலவர் குஷ்

படி செய்ய வேண்டும். இவ்வித கலவரங்களினல் மக்களிடையே அவநம்பிக்கை ஏற்பட்டு விடுகிறது இதுவே எல்லா கேடுகளுக்கும் மூலகாரணமாகும். இவ்வித மனோபாவம் சமாதானத்தை குலைத்து விடும் ஆகவே நிலைமையைச் சீர் செய்யும் பொருப்பு பெரும்பான்மையினருக்கும் சர்க்கார்களுக்கும் சேரும், உண்மைநிலையை மக்களுக்கு எடுத்து கூற வேண்டும். வதந்திகளைத் தடை செய்ய வேண்டும். வதந்திகளை பரவச் செய்பவர்களை கடும்தண்டனையளிக்க வேண்டும் ஏனெனில் சில நபர்களின் சுய நலத்தால், தேசத்தின் சமாதானத்தைக் குலைத்து விடுகிறது.

மாகாண சர்க்கார்கள் பாதுகாப்புச் சட்டங்களை நிறைவேற்றுகையில் வகுப்புவாத குழப்பங்களும் அவை நிறைவேற்றப்பட காரணமென கூறிவந்தனர் தேசத்தின் சதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வகுப்புவாத கலவரங்களே பெரும் தடைகளென கூறின. இன்று பாக்கிஸ்தான் இந்தியா வேற்றுமைகளால் வகுப்பு வாதம் தன் கடைசி தாக்குதலில் ஈடுபட்டு ஜனநாயக சக்திகளை முறியடிக்க நினைக்கிறது. ஆகவே மாகாண சர்க்கார்கள் பொது ஜன பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து அவசர சட்டத்தால் நிலைமையை சமாளிக்க வேண்டும் என்று வேண்டுகிறேம் இப்பயங்கர பேயை கடுமையாய்த் தாக்கி இனி தலையெடுக்க முடியாத வண்ணம் செய்து விட வேண்டும். நேரம் கடத்தினல் பெரும் ஆபத்து ஏற்படும், சிக்கலான சர்வதேச நிலைமை, பயங்கர பொருளாதார சீர்கேடு முதலியவற்றல் சூழப் பட்ட நம் நாடு உள்நாட்டு சமாதானத்தையும் குலைத்து விட்டால் அதன் அழிவு நிச்சயமே. முன்னேறவும் முடியாது, இன்று நமக்கு மஹாத்மா காந்தியின் உதவியும் இல்லை. ஆகவே சீறிய முறையில் சிந்தித்து தகுந்தவருயில் நாட்டை முன்னேற்றுவது நம் கடமை இன்றும் மஹாத்மாவின் தியாகம் விஞ்சி விடும் போல் தோன்றுகிறது நம் அனைவதையும் தியாகம் செய்து அதற்கு வெற்றியளிப் போமாக.

ஹால்கானும் ஒருவர். இச் ஜாதியார் பெஷாவரின் தெற்கிலும் பன்னூ, கோஹட்ஜில்லாக்களைச் சார்ந்த பிரதேசத்திலும் வாழ்ந்து வந்தனர். இப் போராட்டத்தை முறியடிக்க ஔரங்கஜேப் பெரும் படையை அனுப்பினார். பட்டாணியத் தலைவர்களை லஞ்சம் கொடுத்து தன் பக்கம் இழுக்கவும் முயற்சிசெய்தார். சிலருக்கு இனாம்களும் ஜாகீர்களும் கொடுக்கப்பட்டன மற்றும் சிலர் முகலாய ராணுவத்தில் உயர்ந்த பதவிகளைப் பெற்றனர்.

பட்டாணியர்களிடையே வேற்றுமைகளை வளர்த்து அவர்களுடைய சக்தியை முறியடிக்கவும், ஔரங்கஜேப் முயற்சிசெய்தார். இத் தந்திரத்தை "இரு கருங் கற்களை மோதி தூள் செய்தல்" என்ற நாமம் சூட்டினார் ஔரங்கஜேப்.

மேற்கூறிய உதாரணங்களால், பட்டாணியர் பிரச்னை, வகுப்புவாத அடிப்படையில்தோன்றியதல்ல என்பது புலனாகிறது மத அடிப்படை கொண்டதாயின் பட்டாணியர் மொகலாயருக்கு எதிராகபோராடியிருக்கமாட்டார்கள் அக்பரை தீனே இலாஹியின் கர்த்தாவென்று கூறிவிடலாம். ஆனால் ஔரங்கஜேப் ஒரு பக்கா முஸ்லிம் ஆகவே பட்டாணியர் பிரச்னை வகுப்புவாதமற்றது என்பது நிச்சயம்.

பட்டாணியரின் பிரச்னை மத அடிப்படை காரணமானது என பாகிஸ்தான் எண்ணியதே முக்கிய தவறாகும்; ஆகவே பாகிஸ்தானை இஸ்லாமிய நாடு என்று பிரகடனப்படுத்தி விட்டால் பட்டாணியர் பிரச்னை தானே தீர்ந்துபோகும் என்று தவறாக எண்ணியது. அத்தவறை பாகிஸ்தான் இன்று அறிந்து கொள்ளும் விதத்தில் பட்டாணிஸ்தான் கோரிக்கை பலம்பெற்று வருகிறது.

பட்டாணிஸ்தான் இயக்கத்தை அந்நியர் சதிசெய்து தூண்டிவிட்டதாக பாகிஸ்தான் குறை கூறி, சிலசமயம் அப்கானிஸ்தானையும், மற்றும சில சமயம இந்தியாவையும் தாக்கிப் பிரசாரம் செய்வதிலும், விரோதிப்பதிலும் முனைந்துள்ளது - இதனால் பிரச்னைமோசமான நிலைமையை அடையுமே யொழிய, தீர்ந்துபோகாது என்பது திண்ணம்

பட்டாணியரிடம் கொண்டுள்ள அனுதாபத்தை அப்கானிஸ்தான் என்றும் மறைக்க முயலவில்லை. ஆனால் பாகிஸ்தான் குற்றம் சாட்டுவதைப்போல், மலைப் பிரதேசம், அல்லது பாகிஸ்தானுக்கு சொந்தமான எந்த பிரதேசத்தையும் ஆக்கிரமித்துக் கொள்ள நினைக்கவில்லை என்பதையும் அடிக்கடி கூறிவருகிறது.

சுயேச்சை மலைஜாதியினர், அல்லது பட்டாணிய சமூகத்தாரின் நலனைக்கோருவது கொண்டு அப்கானை யாரும் குறை கூற முடியாது. பாலஸ்தீன் அரபுகளிடம் அனுதாபங்காட்டுவதும், ஹைதராபாத் பிரச்னையை ஐ. நா சபையில் சமர்ப்பித்து குட்டை குழப்பிவிடுவதும், பாகிஸ்தான் உரிமையானால், இனஒற்றுமை கொண்ட பட்டாணியரின் நலனில் அக்கறை காட்டுவது அப்கானிஸ்தானுக்கு உரிமையில்லை என்று எந்த சுய அறிவுள்ளவனும் கூற முடியாது

மலை ஜாதியினரை அப்கானிஸ்தானுக்கு எதிராக தூண்டிவிடுவதால் ஒரு பிரயோஜனமுமில்லை. அமானுல்லாகானின் சகோதரரும் அப்கானிஸ்தான் பட்டத்தை கைப்பற்ற முடியாது. இவ்வித தில்லுமல்லுகளின் காலம் மலையேறிவிட்டது. பாகிஸ்தானில் சில காலமாக "அமானில்லா ஜிந்தாபாத்" கூச்சல் கிளம்பிக்கொண்டிருந்தது சமீபத்தில் அவருடைய சகோதரர் ஓர்பெரும் படையுடன் அப்கானைத்தாக்க முயன்றதாகவும், பாகிஸ்தானின் அரசியல் ஏஜெண்டுகள் பெரு முயற்சி செய்து அவரை தடுத்துவிட்டதாகும் செய்தி வந்துள்ளது. எல்லைப்புற பிரச்னையில் சற்று பற்றுகொண்டவர்களும் இவ்வித செய்திகளை பிரச்சாரயுத்தம் என்று நிச்சயமாய் அறிந்துகொள்வர், ஒரு புறம் அமானுல்லா பூதத்தைக் காட்டி அப்கானை பயமுறுத்தவும். மறுபுறம் அவருடைய சகோதரர் படையெடுக்காவண்ணம் தடுத்து. அப்கானிஸ்தானைக் காப்பாற்றிவிட்டதாக ஜம்பமும் பேசுகிறது பாகிஸ்தான்.

இந்தியாமீது பாகிஸ்தான் சாட்டும் குற்றம் முழுப்பொய்யே. ஏனெனில் வடமேற் கெல்லையில் குழப்பங்கள் மலிந்தால் அதனால் இந்தியா பெரிதும் பாதிக்கப்படும்; இவ்வுண்மையை இந்திய அரசியல் தலைவர்களும் நன்கறிவர். கான் அப்துல்கப்பார்கானும் அவரது சகோதரர் டாக்டர் கான்சாயபும் கைது செய்யப்பட்டு பயங்கர சிறைவாசத்தை அனுபவித்து வருவதைக்கண்டும், அது பாகிஸ்தானின் உள்நாட்டு விஷயம் என்று கூறி கண்டிக்காமல் வாளாவிருந்துவிட்ட இந்திய அரசாங்கம, பட்டாணியர் பிரச்னையில் தலையிட்டுவருவதாய் எந்த மூடனும் நம்பமாட்டான். ஆகவே பாகிஸ்தான் குற்றச்சாட்டு மிக விசித்திரமானது

பட்டாணியர் பிரச்னையில் பாகிஸ்தான் தோல்வி அடைந்தால், அதற்குக் காரணம், அதன் திறமையற்ற ஆட்சியென்பதை, அது அறிந்துகொள்ள வேண்டும், மதப் போர்வையில் இப்பிரச்னையை தீர்க்க முடியாது போல் பலாத்காரத்தாலும் ஒன்றும் சாதிக்க முடியாது என்பதை எல்லைப்புற மாகாணத்தில் இன்று நிகழும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

செஞ்சட்டை இயக்கத்தை ஒடுக்க பாகிஸ்தான் கடுமையான பலாத்காரத்தை உபயோகித்தது. பயங்கர அடக்குமுறைச் சட்டங்களைப் பிரயோகித்தது; செஞ்சட்டையினர் மீது பலவித குற்றங்களைச் சாட்டியது; அவர்களை இந்திய ஏஜண்டுகள் என்று கூறியது! எல்

லைப்புற பிரதமரை கொலை செய்ய சதி செய்வதாயும் பிரசாரம் செய்தது; ஆனால் துர்ப்பிரசாரமும், பலாத்காரமும் எவ்வித பலனுமளிக்கவில்லை; பொதுஜனங்கள் மேலும் மேலும் சர்க்காரை வெறுக்கலாயினர். இன்று அவ்வியக்கத்தில் மாஜி லீகர்கள் பலரும் கலந்துள்ளனர் செஞ்சட்டை இயக்கம் பலமடைந்துவருகிவது

காஷ்மீரைத் தாக்கும் ஆபாசக காரியத்திற்கு மலை ஜாதியினரைத் தூண்டி, பாகிஸ்தான் பெறும் தவறு செய்துவிட்டது. இஸ்லாமிய புனித யுத்தத்தால் மயங்கி அவர்கள் காஷ்மீரைத் தாக்க முன்வந்ததாக பாகிஸ்தான் நினைத்தது. அவர்கள் அங்கே கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் சென்றவர்கள். இஸ்லாமுக்கும் காஷ்மீர் கொள்ளைக்கும் எவ்விதசம்பந்தமும் இல்லை யென்பதை யறிவார்கள் காஷ்மீரிலிருந்து வெளியேற்றப்பட்ட அவர்கள் மிகக்கோபம் அடைந்துள்ளனர். ஆகவே பாகிஸ்தான்மீது அவர்கள் இன்று வெறுப்படைந்திருப்பது ஆச்சரியப்படக்கூடிய விஷயமல்ல பட்டாணியர் பிரச்னை வகுப்புவாதம் கொண்டதல்ல, சமூக, பொருளாதார அடிப்படையில் தோன்றியுள்ளதாகும், "வஜீரிகள் பரிசுத்தமான முஸ்லிம்களாயிருக்கலாம். ஆனால் அவர்களுக்கும் வாழ்க்கை வசதிகள் அவசியம் வேண்டும். அவர்கள் வாழ்க்கைச் செலவை பாகிஸ்தான் ஏற்றேயாக வேண்டும். இல்லையெனில் சர்பைரோஸ்கான் நூனின் ஜமீந்தாரி நிலங்களைக், கொள்ளை யடிப்பதினின்றும் அவர்கள் பின்வாங்கமாட்டார்கள்" என்று மிஸ்டர் கே எஸ் காபா கூறுகிறார்.

மலைஜாதியினர் பிரதேசம், மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் அளவுக்குவளம்பொருந்தியதல்ல. நாகரீக வாழ்க்கையை கனவிலும் கருதாத அளவில் பொருளாதார நிலைமை மோசமானதாயுள்ளது. அவர்கள் சிறு சிறு கூட்டங்களாய் வாழ்ந்து வருகின்றனர். வளம்பொருந்திய சமீபத்திய சமவெளிகளை தாக்கி கொள்ளையடிக்கும்பொழுதே அவர்கள் ஒற்றுமையுடன் ஒன்றுகூடுவர்.

ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் கொள்ளையடிப்பது நல்லதென அவர்கள் நினைத்தாலும் சமயம் ஏற்பட்டால் முஸ்லிம்களும் அவர்களுடைய கையிலிருந்து தப்புவதில்லை. அவர்களை சமாதானமாக வாழச்செய்ய இரண்டே வழிகள் உள்ளன. ஒன்று லஞ்சம் அளிப்பது, மற்றொன்று அவர்களுடைய பொருளாதார நிலைமை சீர்பெறச்செய்வது. இவ்விரண்டு காரியங்களுக்கும் பெரும்செல்வம் தேவை. பாகிஸ்தானுக்கு இச்சக்தியில்லை, லஞ்சத்தொகையோ ஐக்கிய இந்தியாவாலும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவு அதிகமாகும். பாகிஸ்தான் அவ்வளவு தொகையை ஆண்டுதோறும் செலவிட முடியாது பொருளாதார நிலைமையை சீர் செய்யும் பாகிஸ்தான் பொருளாதார நிலைமை இடமளிக்கவில்லை சமவெளி பிராந்தியங்களை முன்னேற்றும் காரியத்தினின்றும் நெடுங்காலம் பாகிஸ்தானால் மீள முடியாது

பட்டாணியரின் இயக்கத்திற்கு பொருளாதார காரணங்களின்றி, அவர்களுடைய சுதந்திர வேட்கையும் உள்ளது. அந்நியரின் சுங்க சக்தியையும் அவர்கள் எதிர்த்து போராடி வந்துள்ளனர். அம்மட்டுமல்ல. பஞ்சாபி முஸ்லிம்களையோ அவர்கள் என்றுமே துச்சமாக மதித்துவந்துள்ளனர். இன்று அவர்கள் தங்களை ஆண்டுவருவதைக் காண பட்டாணியர்கள் வாளாவிருக்கமாட்டார்கள்.

எல்லைப்புறத்திலும், மலைஜாதியினர் பிரதேசத்திலும், பாகிஸ்தானுக்கு மிகுந்த தொல்லைகள் இருந்து வருகின்றன. அவை தீர்க்கப்படவேண்டியது அவசியம். வடமேற்கு எல்லையில் சமாதானம் நிலவுவது. பாகிஸ்தான், இந்தியா இருநாடுகளுக்கும் இன்றியமையாததாகும். இவ்வுண்மையை பாகிஸ்தான் அறிந்து, இந்திய நாட்டுடன் ஆலோசித்து, தக்க முறையில் அங்கு சமாதானம் நிலவ பாடுபடவேண்டும். வடமேற்கெல்லையில் சமாதானம் நிலவ, பாதுகாப்பு காரியங்களில், இந்தியா பாகிஸ்தான் ஒத்துழைப்பு அவசியம். ஆகவே பாகிஸ்தான் தான் அனுஷ்டிக்கும் கொள்கையை ஏற்றவிதம் மாற்றிக்கொள்ளவேண்டும், இந்தியநாடும் இப்பிரச்னையை நேர்த்தியானமுறையில் தீர்த்துவைக்க முயலவேண்டும்.

பட்டாணியர் பிரச்னையை சுமுகமான முறையில் தீர்க்கவேண்டுமாயின், பொதுஜன தலைவர்களை பாகிஸ்தான் உடனே விடுதலை செய்யவேண்டும். கான் அப்துல்கப்பார்கான், டாக்டர் கான் இரு தலைவர்களுக்கும், எல்லைப்புறமாகாணத்தில் மட்டுமல்ல, மலைஜாதியினர் பிரதேசத்திலும் நல்ல செல்வாக்கு உண்டு பாகிஸ்தான் விரும்பினால் அவர்களுடைய தேசத்தையும், ஒத்துழைப்பையும் கொண்டு நல்ல பயன்பெறலாம் பட்டாணியரின் இதயங்களைத் திருப்பி பாகிஸ்தானின் நலனுக்குப்பாடுபடச்செய்ய கான் சகோதரர்களால் முடியும். ஆனால் அவர்களுடைய நேர்மையான கோரிக்கைகளை ஏற்றே கான் சகோதரர்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியும். சுதந்தர பட்டாணிஸ்தான் பாகிஸ்தானுக்கு எதிரிநாடல்ல, பட்டாணியரின் விடுதலையே, அவர்களுடைய சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதாகும். சுய அறிவுள்ள எவனும் அவ்வித உரிமையை மறுக்க முடியாது. பட்டாணியருக்கு சுய நிர்ணய உரிமையளிக்கப்பட்டால், அவர்கள் பாகிஸ்தானை விட்டுப் பிரிந்துவிடுவர் என்று கூறிவிட முடியாது; பிரிந்துபோகவும்முடியாது சுதந்திர பட்டாணிஸ்தான் இயக்கத் தலைவர் யாரும் அவ்விதம் கூறவில்லை என்பதை பாகிஸ்தான் அறிந்து, தக்க முறையில் சமாதானம் நிலவ பாடுபடவேண்டும்.

அன்றைய கூற்றும் - இன்றைய நிகழ்ச்சியும்

—[வீர. வெங்கட்ரமணி]—

அன்று 'ஆஸாத்' கூறியது. "சிறப்புடன் வாழ்ந்தவர்கள் சிதறுண்டு அழியுந்தருவாயில் இருப்பதைக் காண்கிறோம். ஏறக்குறைய தொளாயிரம் வருஷங்கள்வரை இந்தியாவில் கம்பீரமாக ஆட்சி செலுத்திய சமூகக் கட்டடம் தகர்ந்துகொண்டிருக்கிறது. இத்தகைய நெருக்கடியான கட்டத்தில் பரிகாரத்தைவிட பிரார்த்தனையே பலனளிக்கமுடியும்" என்று.

இன்றைய விளைவுகள் நம் கூற்றின் உரத்தைச் சாதிக்கும் வளம்பெற்ற வாதங்களாகின்றன.

கெட்டவனைக்கண்டால் எட்டிப்போ என்பது கருத்துச்செழித்ததொரு கூற்றுதான். ஆனால் தூர விலகுபவனையும் தரத்திப்பிடித்துத் துன்புறுத்துவது தானே துட்டர்களுடைய மரபு—இயல்பு.

சண்டைக்காரன் என்றால் சள்ளைதான். அதுவும் அண்டை வீட்டுக்காரனுங்கூட ஆகிவிட்டால்?

பதுங்கிநின்று பழுத்த நேரத்தின் வரவு நோக்கி, வைத்த கண் வாங்காது விழித்தபடியே காத்திருக்கிறான் பக்கத்து வீட்டுப் பகைவன் பாகிஸ்தான். விழுமிய தருணமெதையும் அவன் வீண் செய்ததில்லை. செய்யப்போவதுமில்லை. பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாயிருக்கிறான் கலக மூட்டுவதிலே! பொய்யே புகல்வான், புறஞ்சுவர் கோலஞ் செய்வான் ஒருவன், அதற்கு அரசியல் வியவகார அயல்நாட்டு மந்திரி.

சுதந்திரம் வந்துவிட்டது; சுகங்கள் குவியப் போகின்றன என்றெண்ணி இறும்பூதெய்தியார்க்கு சொப்பனத்து நிகழ்ச்சிபோல சொல்லொணா ஏமாற்றம். நலங்களிற் குறைவு, நலிவு தரும் பஞ்சம், மதங்களால் பிணங்கின்றோம். முறைகளிற் கிளைகள் கண்டோம். பழிகளாற் பகைமை பூண்டோம், காரணமென்ன? அன்றே 'ஆஸாத்' கூறியதுபோல.

"இந்தியர்கள் இதுவரை உணராமலிருந்தால் இனியாகிலும் ஜின்னா ஒரு கலகத்தலைவராயிருந்தார் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டியது அவசியம். கலகங்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பதே அவர்களுடைய நோக்கம்."

பாய்ந்து வரும் புலிக்கு பயங்கரப் பற்கள் எதற்கு இருக்கின்றனவோ, கொட்டும் தேனீக்கு கொடுக்கு எதற்கு இருக்கிறதோ, கொத்தார் குழலார்க்கு கொஞ்சும் விழிகள் எதற்கு இருக்கின்றனவோ, அதேபோல பாகிஸ்தானியருக்கும் கொலை, களவு, கற்பழித்தல் முதலியனவாம்.

இனியும் இந்திய மக்களை, குறிப்பாக இந்திய முஸ்லிம்களை பாகிஸ்தானின் பசப்பு வார்த்தைகள், புகழ்ச்சியுரைகள் புலன்மாற்றிப் போடுவதற்கில்லை. "அம்புலிமாமா! வா, வா! என்பது அழகான அழுகையடக்கும் பாட்டேயன்றி, அம்புலிமாமா அருகில் வந்து அம்புலித் தம்பிப்பாப்பாவை ஆரத்தழுவிக் கொஞ்சுவது செய்முறைக்குப் புறம்பானது. "காக்கா பார், காக்கா!" என்று கூறிக் குழந்தையைக்கூடக் கொஞ்ச நேரத்திற்குமேலே ஏமாற்றமுடிவதில்லை.

முஸல்மான்களின் நேரடி நடவடிக்கை நிகழ்ச்சிகளை நினைவிலிறுத்துபவர், நவகாளி நிகழ்ச்சிகளை நெஞ்சத்திறுத்துபவர், இன்றும் கிழக்கு வங்காளத்தில் நடக்கும் வெங்கொடுமைகளைக் கருத்தூன்றிப் படிப்பவர், இனியும் பாகிஸ்தானை நாடிப் பேசுவதற்கு—போவதற்கு புத்தியற்ற பேதைப் பிறவிகளல்ல.

'இட்' கொண்டாட்டத்தன்றைய லியாகத் அலிகானின் பரிவு கண்டு ஏமாறவேண்டா. செட்டியார் வாயிளித்துப் பல்லிளித்து, வரிசை வைத்தழைத்தாரென்றால் ஏதோ சூதுவினை சூழவிருக்கிறது என்பதுதான் புதைந்து கிடக்கும் பொருள்.

கட்சியென்பதற்கொரு கொள்கை வேண்டும். கொள்கையிலே கருத்திருக்கவேண்டும். கலப்பற்ற தூய்மையின் தெளிவு ஆங்கே ததும்பி நிற்கவேண்டும். கருங்கல்லினையொத்து தளர்ந்து வளையாத் தன்மை வேண்டும்.

பாகிஸ்தானின் கொள்கைகள் யாவுமே பூச்சுப் பொருள்கள்தான். பூச்சியரித்தால் புலனாகும் அதன் பொய்வேடம்

இரு சமுதாயக் கொள்கையைச் சற்று ஆராய்வோம். இதன் அடிப்படைக்கொள்கை யாதெனில், "ஒரே மதத்தினர் நிரம்பிய நாட்டிலேதான் அமைதியும், அதன் வழி நலிவு நீங்கப்பெற்ற நல்வாழ்வும் நிலைபெறக்கூடும்" என்பதாம். இது எவ்வளவு தூரம் சரியானது?

அது சரியானதேயல்ல என்று சரித்திரச்சான்று கூறும். சரித்திரம், ஒரு அலகிலா ஆசானையொக்கும். அது அநேகமாக எல்லாவற்றையும் வித்தாரமாக விளங்கவைத்து, மெய்யுருவிற்காட்டும். நல்லது. இரு சமுதாயக்கொள்கை பற்றிய சரித்திரச் சான்று என்ன?

நபிநாயகம் உயிருடன் இருந்தவரை ஒற்று வாழ்ந்த அவருடைய சீடர்கள் அவர் மறைந்தபின் பிணக்குற்றுப் பிரிந்துபோயினரே, காரணமென்ன? ஒரே மதத்தினர்தானே அவர் யாவரும்?

அரபு நாடுகளும் துருக்கி நாடுகளும் சண்டையிட்டனவே. அவை முஸ்லிம் நாடுகள்தானே?

மத ஒற்றுமை அமைதியை நாட்டிலே நிறுவக் கூடுமென்றால் புத்த மதம் பரவும் ஜப்பான், சீனா நாடுகளிடையே சண்டை நிகழ்ந்தபோது அது ஏன் குறுக்கிடவில்லை?

எத்தனை எத்தனை ஆண்டுகளாகப் பார்க்கின்றோம். கிறிஸ்துவ நாடுகள் பல, வெறி மிகுந்து, ஆணவத்தால் மோதி மிதித்து நசிந்துபடுவதை? அது மட்டுமல்ல

வேற்று மதத்தினர் பலர் கூடிய நாட்டிலே, சூழவிருக்கும் பேதத்தை சட்டை செய்யாது விரட்டி, சேர்ந்து வாழ்தல் முடியாதது அன்றே! அமெரிக்காவை நோக்குங்கள். ஆயிரமாயிரம் ஜாதியினர். ஒற்றுமையில்லையா அங்கே? ஒருங்கு சேர்ந்து வாழும் அருங்குணம் இல்லையா அங்கே? யாதும் ஊரே, யாவரும் கேளிர். அதுவன்றோ பரந்த மனப்பான்மை

பின் ஏன் பாகிஸ்தானியர் வெம்பி வெதும்பிய இந்த பழம்போலிக் கொள்கையைப் பரப்பி தொல்லை விளைவிக்கின்றனர்?

இந்திய நாட்டிலே அமைதி நிலவிவிடுமானால் இந்திய முஸ்லிம்களுக்கு "ஓ! இந்தியரும் முஸ்லிம்களும் இழைந்துபட்டு, சேர்ந்து வாழ்ந்து சுகம் பெறுதல் எளிதப்பா!" என்பது விளங்கும். அப்பொழுது பாகிஸ்தானின் பொய்வாதம் பலனற்றுப் போகும். பாகிஸ்தானியத் தலைவர்கள் பழி மிகுத்து இழிவுற்று ஒருங்கே ஒழிந்துபடுவர். அப்புறம்........

அந்த நிலை, அமைதி நிலை வந்துவிடாது, கலகம் விளைவிப்பதே பாகிஸ்தானியர் கருத்து. அவர்களுடைய முக்கிய கருத்துகள்.

1. காங்கிரசின் பலம், செல்வாக்கு முதலியன நாட்டிலே குன்ற வேண்டும்.

2. நாட்டின் பொருளாதார அமைதி பலமிழந்து போகவேண்டும்.

3. உலகமக்கள் உண்மை விளங்காது, இந்தியர் கொடுமை புரிகின்றனர் என்று எண்ண வேண்டும்.

இவைகளைச் சாதிப்பதற்குற்ற ஆயுதங்கள்தாம் கொலை, களவு, கற்பழித்தல் முதலியன.

மேற்கூறியவற்றுள் முதன்மையானதை சாதிப்பது அவர்களுக்கு எளிதிலும் எளிதாகிறது

அவர்க்ள் தங்கள் நாட்டிலுள்ள இந்தியர்களை முற்றிலும் துரத்தவும் மாட்டார்கள். அமைதியாக வாழவும் அனுமதிக்காட்டார்கள்.

இந்தியாவில் அமைதியின் சின்னம் தலைகாட்டும் போதெல்லாம் அவர்கள் தங்கள் நாட்டு இந்திய மக்களை துன்புறுத்துவார்கள். கொலை செய்வார்கள். கற்பழிப்பார்கள், அப்பொழுது என்ன நடக்கும்?

இதைக் கண்டு பொறுக்கவொண்ணாத இந்திய மக்கள், பொறுமிப்பதைத்தெழுந்து தங்கள் நாட்டில் உள்ள முஸ்லிம்களைத் தாக்க முற்படுவார்கள். கலகத்தின் கோலம் தலைவிரித்தாடும். இதைத்தானே விரும்புகின்றனர் அவர்கள்.

தொடர்ந்து நடத்தப்படும் இந்த நாடகம், சகடக்கால் போன்றுவரும் இந்த சுற்றுவட்டச் சுழற்சி நிகழ்வினை ஆராய்வோம்.

கலகம், அமைதி - கலகம். ஆகவே முடிவாகக் கூறுமிடத்து, வெறுத்தல், வெருட்டி விரட்டல், வெட்டி வீழ்த்தல் இவைதான் பாகிஸ்தானியரின் முழுமுதற்கொள்கைகள்.

பொய் பேசுதல், பொல்லாங்கு சாட்டல், இவைதான் பக்கததுணை ஆயுதங்கள். ஐந்து முஸ்லிம்கள் இந்தியாவிலே கொல்லப்பட்டால் அது ஐ. நா.-விலே ஐயாயிரமாகப் பெருகி வளரும்.

பொருளாதார விஷயங்களிலேகூட இக்கலகங்கள் பலவிதத் தொல்லையளிக்கும் நாளுக்கொரு கலகம் மூண்டெழும் நாட்டிற்கு, ஏராளமான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு யார்தான் துணிவார்கள் கலகம் நிகழ்ந்துகொண்டிருந்த நாளிலே சீனத்தலைவர் சியாங்-கே-ஷேக்குக்கு படைப்புலன் கொடுத்துதவிய அமெரிக்காவின் நிலை என்னவாயிற்று?

ஆதலால் எந்தவிதத்திலும் இந்திய நாட்டினரைத் துன்புறுத்துவதுதான் பாகிஸ்தான் முஸ்லிம் லீகின் கருத்து.

நாம் வஞ்சம் தீர்த்துக் கொள்ளுவதற்காகக் கொதித்தெழுதல் கூடாது. குரைக்கும் நாயைக் கண்டு குரைப்பவரும் இல்லை. கடிக்கும் செருப்பைக் கண்டு கடிப்பவரும் இல்லை. கொல்லா நோன்பு கற்றுத்தந்து மறைந்த காந்தி வழி செல்லும் நாம் "உண்மையே வெல்லும்" என்ற உரம் பெற்ற நம்பிக்கை கொண்டு பொறுமையுடன் முன் செல்வோம் கங்கை போன்று, காவிரி போன்று நம் கருத்துக்கள் ஊறிப் பெருகட்டும்.

இத்தனை கூறியபின்னனர்கூட ஒருவருக்கும் ஐயமிருக்கத்தேவையில்லை. "முஸ்லிம்லீக் கட்சி" இந்தியாவில் அவசியம்தானா? என்பது பற்றி.

எந்தவிதத்திலும் அதற்கவசியம் இல்லை. இந்தியா பரந்த மனப்பான்மை கொண்டது-

"இல்லையில்லை. அதுவுமிருந்துவிட்டுப் போகட்டும், அதன் கொள்கைகள் கெடுதி விளைவிக்கக்கூடியனவா என்ன?" என்று கூறுவோர்க்கு நாம் ஏளனச் சிரிப்பில் பதிலளிப்போம்.

பொரியின் வாயைப் பிளந்துவைத்து தின் பண்டத்தையும் அதிலே திணித்துவைத்துவிட்டு "எலி பிடிப்பது என்னுடைய நோக்கமல்ல தானாக விழுந்தால் நான் என்ன செய்யட்டும்" என்று கூறுவதை யொக்கும் அது

"தற்காப்புக்காக, தற்காப்புக்காக" என்று கூறி வந்த அமெரிக்காவின் அணுகுண்டு உற்பத்தி இன்று எந்த அளவில் நிற்கிறது! என்பது நாமெல்லாம் நன்கறிந்த உண்மைதானே!

— "வீரன் முஹம்மதுகான்" —

—(நாகை, வி. இ. எம். ஹமீது யூசுபுவத்தனி)—

செஞ்சி நகரை 18-ம் நூற்றாண்டில் அரசாண்ட தேசிங்கு ராஜனின் அத்யந்த நண்பன்தான் முஹம்மது கான். அவன் ராணுவப் பயிற்சியில் கைதேர்ந்தவன் தேசிங்கு ராஜன் தமது சிறுவயதில் போர்முறை பற்றிப் படித்து வருகையில் இவனும் கூடப் படித்தவன். இருவரும் சிறுவயதில் காட்டிற்குச்சென்று சிறுத்தை, புலி முதலியவைகளை வேட்டையாடி வருவதுண்டு. அவனது வீரத்தை மெச்சியேதான் தேசிங்கு தனது பிரதம சேனாதிபதியாக்கினான். அவனைக் கூட்டிக்கொண்டு டில்லிக்குச் சென்றுதான் தன் தந்தையைத் தோற்கடித்த டில்லி சக்ரவர்த்தி பஹதூர் ஷாவின் 'பாராஹஜார்' என்னும் பஞ்ச கல்யாணி முரட்டுக்குதிரையை அடக்கி வென்று சிறை வைக்கப்பட்டிருந்த தமது தந்தையை மீட்டு பெரும் கியாதியும் பெற்றுத் தன் ஊர் திரும்பினான். மிகவும் சந்தோஷம் கொண்டு பஹதூர்ஷா அவனை செஞ்சிக்கு சுதந்திர அரசனாய் ஆக்கிவிட்டார். அக்குதிரையும் பகதூர்ஷாவினால் அவனுக்கே பரிசாகக் கொடுக்கப்பட்டது. அது அதன் பிறகு தேசிங்கு ராஜனுக்கு மிகவும் அடங்கி நடக்கலாயிற்று. மரணபரியந்தமும் அது அவனிடமே இருந்தது

முஹம்மது கானுக்கு செஞ்சி நகருக்கு இருபது மைல் தெற்கிலுள்ள வழுதாவூர் எனும் ஊரே பிறப்பிடம். அங்கேயே கலியாணம் நடக்க அவனுக்கு ஏற்பாடாகி இருந்தது. தேசிங்கு ராஜனின் செல்வாக்கையும், ராணுவ முறையில் அவன் தேர்ச்சியடைந்திருந்ததையும் கண்ட ஆற்காட்டு நவாபு ஸையதுல்லா கானுக்குப் பொறாமை உண்டாயிற்று. அந்நவாபு கி. பி. 1711-ல் ஷா ஆலம் இறந்ததும், அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த ஜஹந்தர் என்பவனையும் அவனின் ஆலோசகர் ஸுல்பிர்கர்கான் என்பவனையும் கொலை செய்துவிட்டு பட்டத்துக்கு வந்த 'பரக்ஸியர்' என்பவனால் ஆற்காட்டு நவாபாக்கப்பட்டவன் சுதந்திர அரசனாய் தேசிங்கு ஷா ஆலத்தினால் ஆக்கப்பட்டதும் புரியாது. "அவன் நமக்குக் கப்பமும் கட்டுவதில்லை. ஆகையால் அவனை மட்டந்தட்டிக் கப்பம் வசூலிக்க முற்படவேண்டும்." என்று நினைத்து தன் ஆதிக்கத்திலுள்ள மற்ற சிற்றரசர்களைத் தன் தர்பாருக்கு அழைத்தான். தேசிங்கு ராஜனின் பெருமையையும் அவனின் ராணுவ பலத்தையும் எடுத்துக்கூறி "அவன் கப்பம் கட்டுவதுமில்லை. ஆகையால் எல்லோரும் ஒன்றாகச்சேர்ந்து அவனை ஒழித்துக் கட்டவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். அவனின் சொல் அவர்களுக்குப் பிடிக்காவிட்டாலும், வற்புறுத்தலினால் 'எல்லோரும் சேர்ந்து யுத்தம் செய்வது' என்னும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். சந்தர்ப்பத்தைக் கவனித்துக்கொண்டிருந்த ஆற்காட்டு நவாபு, செஞ்சி தளபதி முஹம்மதுகான் கல்யாணத்தினிமித்தம் செஞ்சியை விட்டுப்போயிருப்பதை நல்ல வாய்ப்பாய்க்கொண்டு செஞ்சிமீது படையெடுக்க ஆரம்பித்துவிட்டான். தன் நாட்டின்மீது படையெடுத்துவரும் ஆற்காட்டு நவாபின் இச்செய்கையைக்கண்ட தேசிங்கு ராஜன் மிகவும் ஆத்திரப்பட்டு முஹம்மது கானுக்குத் தெரியப்படுத்தி ஒரு கடிதம் எழுதினான். அப்பொழுது கலியாணச் சடங்கு அரை குறையாக நடந்துகொண்டிருந்தது. அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன், முஹம்மது கான் "கலியாணச் சடங்குகளை நிறுத்துங்கள். நான் செஞ்சிக்கு உடனே புறப்படவேண்டும்" என்று தன் பெற்றோரிடம் கூறினான். பெற்றோர் கலியாணச் சடங்கு பூரணமாக முடிந்தபின் அடுத்ததினம் போகலாமென எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் கேட்கவில்லை. "என் நாட்டின் மீது ஒரு விரோதி படையெடுத்து வந்திருக்கையில், சேனாதிபதியாக உள்ள நான் கலியாணப் பந்தலில் உட்கார்ந்து சந்தோஷத்தில் வாழ்ந்திருப்பது நல்லதல்ல அது பேடித்தனமுமாகும் ஆகவே, யுத்த களம் சென்று அவ்விரோதி ஆற்காட்டு நவாபை பூண்டோடு அழித்துவிட்டுத் திரும்பிவந்த பிறகு மற்ற திருமணச் சடங்குகளைச் செய்துகொள்ளலாம்" என்று சொல்லி உடனே தனது குதிரையின்மீது ஏறி செஞ்சி வந்து சேர்ந்தான். தேசிங்கு ராஜனைக் கண்டுவிட்டு, யுத்தகளத்திற்குப் போகப் புறப்படுகையில், தேசிங்கு தாமும் கூட வருவதாகச் சொன்னான். அதற்கு முஹம்மது கான் "அரசே! அற்பனிலும் அற்பனாகிய ஆற்காட்டு நவாபுடன் சண்டை செய்வதற்குத் தங்களை அழைத்துச் செல்வதை அவமானமாகக் கருதுகிறேன்; தாங்கள் போருக்கு வந்தால் எனக்குப் புகழ் கிடைக்கமாட்டாது; தனித்துச் சென்று சண்டை செய்ய விரும்புகிறேன்; எனக்கு விடை கொடுத்தனுப்புங்கள்." என்று சொன்னான். அவன் விருப்பத்தை அறிந்த ராஜா தேசிங்கு "உன் எண்ணம் நிறைவேறட்டும்; வாகையுடன் திரும்பிவா" என்று சொல்லி, ஒரு குதிரைப் படையுடன் அவனை அனுப்பிவைத்தான் "ஆற்காட்டு நவாபைக் கொல்லாமல் திரும்பேன்" எனும் சபதத்தோடு புறப்பட்டான் முஹம்மதுகான். நூற்றுக்கணக்கில் நவாபின் படைகளை வீழ்த்தினான். தமது படைகளை துவம்சம் செய்யும் முஹம்மதுகானைக் கண்டு ஆற்காட்டு நவாபு மிகவும் நடுங்கிப் போனான். அவனும், அவனது பிரதம சேனாதிபதி தாவுத்கானும் ஓடிவிட தீர்மானித்தனர். ஆற்காட்டு நவாபு சாதாரண போர் வீரனின் உடையைப்போல் அணிந்து கொண்டு ஒரு

சந்தாதாரர்கள்
விளம்பரம் கொடுக்கும் அன்பர்கள்
ஏஜெண்டுகளுக்கு

சிந்தனைப் பிழம்புகள் செவ்வையான அரசியல் கருத்துகள் கொண்டு விளங்குவதைப் போலவே 'ஆஸாத்' அழகிய முறையிலே கண்கவர் வகையிலே எடுப்பாகவும், அமைய வேண்டும் என்பது நம் அவா. சொந்த அச்சுக்கூடம் இல்லாததால் அது சாத்தியமில்லை. எனவே அச்சுக்கூட ஏற்பாடுகள் முடிவடையும் வரை பொறுத்திருக்க வேண்டுகின்றோம்.

புதரில் போய்ப் பதுங்கிக்கொண்டான். தாவூத்கானோ கையில் ஒரு துப்பாக்கியோடு, இறந்து கிடந்த தமது சிப்பாய்களின் மத்தியில் "முஹம்மது கான் இங்கு வருவான்; அவனை நாம் சுட்டுக் கொன்றுவிடலாம்." என்ற கெட்ட எண்ணத்தோடு படுத்துக்கொண்டான். பகைவர் சேனையில் ஒரு பகுதியை வீழ்த்திவிட்டு தன் குதிரையுடன் திரும்ப அவ்வழியே செல்லுகையில் தாவூத்கான், முஹம்மது கானைப் பின்புறத்திலிருந்து துப்பாக்கியினால் சுட்டான். முதல் சூடு பிடரியிலும் அவன் பிணக்களத்தில் யார் தம்மைச் சுட்டது என்று திரும்பிப் பார்க்கையில் இரண்டாவது சூடு முகத்திலும் பட்டது. உடனே இறந்தே குதிரையின் மீதிருந்து கீழே விழுந்தான். என்னே இவனின் வீர மரணம்!

முஸ்லிம் சோதரீர்! முஹம்மதுகானின் வீரத்தைப் பார்த்தீர்களா? சில முஸ்லிம் லீக்கர்கள், முஸ்லிம்கள் தன் நாட்டின்மீது படை எடுத்துவந்தால், அவர்களையே ஆதரிப்பது தங்கள் கடமை என்றும், பாக்கிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் யுத்தம் நேரின் தாங்கள் பாக்கிஸ்தானுக்கே உதவிசெய்யப் போவதாகவும் ரகசியமாகச் சொல்லிவருவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், ஒரு முஸ்லிம் தன் நாட்டின்மேல் படை எடுத்து வந்தும் இவ்வீரன், வகுப்புவாத குறுகிய மனப்பான்மை கொள்ளவில்லை. தேசபக்தியுள்ள எவனும வகுப்புவாதத்தை மேற்கொள்ளமாட்டான். வகுப்பு வாதியாக முஹம்மதுகான் இருந்திருந்தால் திருமணக்கோலத்தோடு ஆற்காட்டு நவாபை எதிர்க்க முற்பட்டிருப்பானா? காஷ்மீர் விஷயத்திலும் நம்மை சோதிக்க எதிர்காலம் காத்திருக்கிறது. அத்தருணத்தில் இந்திய முஸ்லிம்களாகிய நாம் முஹம்மதுகான்களாக ஆகி, அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தேச நலத்திற்காக அவன் ஏற்றுக்கொண்ட மாதிரி வீர மரணத்தை ஏற்றேனும் வாகை மாலை சூடுவோமாக!

ஜெய்ஹிந்த்.

" ஹுப்புல் வத்தன் மினல் ஈ மான் "
(தாய் நாட்டை உகப்பது ஈமானில் நின்றும் உள்ளதாகும்) நாயக வாக்கியம்.

செய்திகள்.

மேலப்பாளையத்தில் கைத்தறி நெசவாளர்களின் பரிதாபநிலை

நெல்லை, மார்ச் 9—

9உ நான் மேலப்பாளையம் நகரசபை ஆபீசுக்கு ஜனாப் வி. எஸ். டி. முகம்மது இப்ராகிம், நகரசபைத் தலைவர் அவர்களுடன் சென்றிருந்தேன். அங்கு முஸ்லிம் ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் க்யூவில் நின்று தங்கள் கார்டுகளை, கஞ்சி வாங்குவதற்காகப் பதிவு செய்து கொண்டிருந்தனர். பக்கத்தே ஒரு திடலில் பலர் கஞ்சி தயார்செய்து கொண்டிருந்தார்கள். மத்தியானம் வரை கூட்டம் குறைந்ததாக தெரியவில்லை. சுமார் 4000 பேர் கஞ்சி வாங்கிக் கொண்டு வீடு திரும்பினர்.

மேலப்பாளையத்தில் சுமார் 30,000 கைத்தொழில் நெசவாளர்கள் இருக்கின்றனர். கைத்தறிகள் 6000க்கு மேல் இருக்கின்றன. அவர்களில் ஒரு சிலரைத்தவிர மற்றவர் யாவரும் அதே ஜீவனஞ் செய்கிறவர்கள்.

இன்று அவர்கள் படும் தொல்லைகளிலிருந்து அரசாங்கம் சீக்கிரம் மீட்காவிட்டால் அபாயம் நேரிடக்கூடும் என்று தெரியவருகிறது. கதர் உற்பத்தியிலும், சமீபத்தில் நடைபெறவிருக்கும் நீர்ப்பாசன திட்டங்களிலும், ரஸ்தா அபிவிருத்தி வேலைகளிலும் பங்கெடுத்துக்கொள்வதால் அந்த நெசவுத் தொழிலாளிகள் தங்களுடையஏழ்மையைத்தாற்காலிகமாகப் போக்கிக்கொள்ளலாம்.

ஆயினும், இவை யாவும் தாற்காலிகமானவை என்பதை மறப்பதற்கில்லை அவர்களுடைய நிலை, நல்ல நிலைக்கு உயர்ந்து வருவதற்கான சீர்திருத்தங்களை, நிரந்தரமான முறையிலே சர்க்கார், செய்யவேண்டும். சர்க்காருடன் மேலப்பாளையத்துப் பணக்காரர்கள் ஒத்துழைத்தல் மிக்க அவசியம். சர்க்கார் செய்யும் எந்த சீர்திருத்தத்திற்கும் மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

விழுப்புரம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் ராஜீனாமா அங்கீகாரம்.

விழுப்புரம் மார்ச்சு 10உ

விழுப்புரம் நகர காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஸ்ரீ பி. லெக்ஷ்மிநாராயண ரெட்டியார் தலைமையில் நம்பிக்கையில்லையென்று 12 மெம்பர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்தை விவாதிக்க கமிட்டியின் கூட்டமொன்று நேற்று மாலை தலைவர் ஸ்ரீ ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பத்தில் ஸ்ரீ ரெட்டியார் தன் தலைமைப்பதவியை ராஜிநாமா செய்தார். ராஜிநாமா ஒப்புக்கொள்ளப்பட்டது. இடை காலத்திற்கு உபதலைவர் ஜனாப் H. உமர் கான் சாயபு அவர்கள் தலைவராக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

— எங்களிடம் —

பலவிதமான பேப்பர்கள்,
அக்கவுண்ட்புக்குகள், ஸ்கூல் மாண
வர்களுக்கு வேண்டிய நோட்புக்கு
கள், பெப்பர்மிண்ட்கள், சோப்புகள்
செண்டுகள், பேட்ரிலேட், பீங்கான்,
கண்ணாடிசாமான் வகைகள், பனி
யன்கள், சூட்கேஸ்கள், குடைகள்
இன்னும் மற்ற ஷாப் சாமான்களும்
கிடைக்கும்.

*

K. M. P. பக்கிரிசாமி பிள்ளை

ஜவுளி அண்டு ஜெனரல் மர்ச்செண்ட்,

கடைத்தெரு, — கும்பகோணம்.

Registered No. 5068.

ஸ்தாபிதம் 1909.

தந்தி விலாசம்:—"கோகுல்" டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். அண் கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு:—

மதராஸ் & மன்னார்குடி.

சந்தனாதித் தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும்,
குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்றவை.

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள்
பல காய்கறி ஊருகாய்
ரோஜாப்பூ குல்கந்து

வாசனைப் பாக்கு
வாசனை சுண்ணாம்பு
அரகஜா

முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

Printed by V. Jayaram at his Sri Rama (Power) Printing Works, 38, Sarargapani East Vadamboki St, Kmu
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam.